## குற்றவியல் சட்டச் சேவைகள்

ஒண்டாரியோ சட்ட உதவி (LAO) நிறுவனத்தின் குற்றவியல் சட்டச் சேவைகளில், வழக்கறிஞர்களின்றி நீதிமன்றத்துக்கு வருகை தரும் குறைந்த வருமானம் பெறுகிற மக்களுக்கு உடனடியாகச் சட்ட உதவிகளை வழங்கக்கூடிய நீதிமன்றக் கடமையிலுள்ள சட்டவாதியும் உள்ளடங்குவார். ஏனைய சேவைகளில், ஒரு வழக்கறிஞர் மூலம் 20 நிமிட சட்ட ஆலோசனைச் சுருக்கம் வழங்குதல், ஒரு தனியார் வழக்கறிஞர் மூலமான சட்டப் பிரதிநிதித்துவம், LawFacts.ca என்ற எமது இணையவழி சட்ட ஆலோசனை இணையத்தளத்துக்குப் பரிந்துரைத்தல் என்பன உள்ளடங்கும்.

மேலதிகத் தகவல்களை **legalaid.on.ca/criminal** மூலம் அறிந்துகொள்ள முடியும்

## வறுமைச் சட்டச் சேவைகள்

வீடமைப்பு, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் தொழில் வாய்ப்பு போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு சமுதாய சட்டச் சிகிச்சை நிலையங்கள் உதவலாம். ஒவ்வொரு சட்டச் சிகிச்சை நிலையத்தினதுமான வளங்களுக்கு ஏற்ப கிடைக்கக்கூடிய சேவைகள் வேறுபடுகின்றன. இந்த சிகிச்சை நிலையங்களில் தீர்வு வழங்கப்படும் சட்ட விடயங்களில் பின்வருவனவும் உள்ளடங்கும்:

- சமூக உதவி விடயங்கள் மற்றும் ஒண்டாரியோ வேர்க்ஸ் (Ontario Works) மற்றும் ஒண்டாரியோ அங்கவீன உதவி நிகழ்ச்சித்திட்ட (Ontario Disability Support Program) விடயங்கள் என்பவற்றுக்கான மேன்முறையீடுகள்
- ஊழியர் காப்புறுதி மேன்முறையீடுகள்
- வேலைநிலையப் பாதுகாப்பு (Workplace Safety) மற்றும் காப்புறுதிச் சபை (Insurance Board) என்பவற்றுக்கான வேலைநிலையப் பாதுகாப்பு தொடர்பான மேன்முறையீடுகள்
- நிலப்பிரபுக்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் சபையில் (Landlord and Tenant Board) பிரதிநிதித்துவம் செய்தலை உள்ளடக்கக்கூடிய வீடமைப்பு சார்ந்த விடயங்களுக்கு உதவி வழங்குதல்
- கனடா ஓய்வூதியத் திட்ட (Canada Pension Plan) மேன்முறையீடுகள் அல்லது பிரச்சினைகள்

சில சிகிச்சை நிலையங்கள் உள்ளூர் தேவைகளைப் பொறுத்து சட்டத்தின் ஏனைய பரப்புக்களிலும் உதவிகளை வழங்குகின்றன.

உள்ளூர் சட்டச் சிகிச்சை நிலையமொன்றைக் கண்டுபிடிப்பதற்கு, **legalaid.on.ca/clinics** ஐப் பார்க்கவும்

# தொடர்புகளுக்கு

## கட்டணமற்ற தொலைபேசியின் ஊடாக எங்களை அழைத்திடுங்கள் 1-800-668-8258

இச்சேவையினை திங்கள் முதல் வெள்ளி வரையில், மு.ப 8 முதல் பி.ப. 5 மணி வரை பெறலாம்.

செவிப்புலனற்றோருக்கான TTY சேவை: 1-866-641-8867

## ஆங்கிலம் உங்கள் முதல் மொழி இல்லையா?

சட்ட உதவி ஒண்டாரியோ (LAO) -வின் கட்டணமற்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் பரந்த அளவிலான பொதுத் தகவல்களையும் சுருக்கமான சட்ட ஆலோசனைகளையும் சட்ட உதவிக்கான விண்ணப்பங்களையும் 200 -இற்கும் மேற்பட்ட மொழிகளில் உங்களால் பெற முடியும்.

## legalaid.on.ca என்ற எமது இணையதளத்தைப் பார்க்கவும்

சட்ட உதவி ஒண்டாரியோ (LAO) நிறுவனம் தொடர்பில் மேலும் தகவல்களை அறிந்து கொள்வதற்கு எமது இணையதளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது அகதிகள் சட்டம், குற்றவியல் சட்டம், உளநலச் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான கேள்விகளுக்கு பதில்களை அறிந்து கொள்வதற்கும், உங்கள் சுய அடையாளம் பழங்குடியினர் எனின் வளங்களைப் பெறுவதற்கும் LawFacts.ca இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

## எமது சேவைகள் திருப்தியளிக்கவில்லையா? எங்களுடன் பேசுங்கள்

சட்ட உதவி ஒண்டாரியோ (LAO) -வின் சேவை தொடர்பில், சமுதாயச் சட்டச் சிகிச்சை நிலையமொன்று அல்லது சட்ட உதவி வழக்கறிஞர் தொடர்பில், நீங்கள் மகிழ்ச்சியடையவில்லை எனின் நீங்கள் முறைப்பாடு செய்யலாம்.

தயவு செய்து **legalaid.on.ca/complaints** -இற்குச் செல்லவும், அல்லது **416-204-7104** அல்லது **1-866-874-9786** -இற்கு **அழைப்பை** ஏற்படுத்தவும்.



LEGAL AID ONTARIO
AIDE JURIDIQUE ONTARIO

# சட்ட உதவி ஒண்டாரியோவினால் உதவ முடியும்

பொருளாதார ரீதியில் தகுதியான, குறைந்த வருமானம் பெறும் ஒண்டாரியோ வாசிகளுக்கு பின்வரும் துறைகளில் நாங்கள் சட்டச் சேவைகளை வழங்குகின்றோம்:

- வீட்டு வன்முறை
- குடும்பச் சட்டம்
- குடிவரவு மற்றும் அகதிகள் சட்டம்
- குற்றவியல் சட்டம்
- வறுமைச் சட்டம்

# வழக்கறிஞரொருவர் தேவையாக உள்ள போதிலும் அவருக்கான செலவுகளைத் தாங்கிக்கொள்ள முடியாதுள்ளதா?

குற்றமிழைத்த முன்னாள் பங்காளர்களிடமிருந்து பிள்ளை உதவி கோரும் தனித்து வாழும் பெற்றோர்கள்; வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள்; துஷ்பிரயோகம் செய்யப்படுவதில் பாதுகாப்பதற்காகத் தமது பிள்ளைகளின் பாதுகாப்பை தமக்கு வழங்குமாறு கோரும் பெற்றோர்கள்; அகதிகள்; காயமடைந்த தொழிலாளர்கள்; மற்றும் குற்றஞ்சாட்ட ஆட்கள் உள்ளிட்ட சுமார் 4,000 ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு சட்ட உதவி ஒண்டாரியோ (LAO) நிறுவனம் ஒவ்வொரு நாளும் உதவி வழங்குகின்றது.

## சட்ட உதவிச் சேவைகள்

- **நீதிமன்றத்தில்.** கடமையிலுள்ள சட்டதரணிகள் என்போர் வாடிக்கையாளர்களின் சட்டப் பிரச்சினைகளை விரைவாக மதிப்பீடு செய்து ஆலோசனைகளையும் தகவல்களையும், நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யப்படாத மற்றும் உதவி வழங்கப்படாத நிலையிலுள்ளவர்களுக்கு பிரதிநிதித்துவத்தையும் வழங்கும் வழக்கறிஞர்களாவர். குடும்பச் சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் பொதுச் சட்ட ஆலோசனைகளை இலவசமாகப் பெறுவதற்கும் சட்ட ஆவணங்களை மீளாய்வு செய்வதற்கும் - பெரும்பாலான குடும்ப நீதிமன்றங்களில் அமைந்துள்ள - குடும்பச் சட்டத் தகவல் நிலையங்களிலுள்ள வழக்கறிஞர்களுடனும் வாடிக்கையாளர்கள் பேசலாம்.
- **தொலைபேசியின் ஊடாக.** கட்டணமற்ற சேவைகளில், தகவல், பரிந்துரை, சட்ட உதவி விண்ணப்பங்கள் மற்றும் வழக்கறிஞரொருவர் மூலமான ஆலோசனை என்பன உள்ளடங்கும்.
- **தனியார் வழக்கறிஞரொருவர் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படுதல்.** சட்ட உதவி ஒண்டாரியோ நிறுவனத்தின் விடயப் பரப்புக்குள் அடங்கும் சட்டப் பிரச்சினைகளைக் கொண்ட, பொருளாதார ரீதியில் தகுதியான வாடிக்கையாளர்கள், ஒரு குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கான வழக்கறிஞரொருவரின் செலவை உள்ளடக்கிய சான்றிதழொன்றைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும்.



## சட்டச் சேவைகளுக்கான தகைமை

சட்ட உதவி ஒண்டாரியோ (LAO) நிறுவனம் உங்கள் சட்ட விடயத்துக்கு மிகவும் பொருத்தமான சேவைகளை வழங்கும். உதவியைப் பெறுவதற்கு, நீங்கள் பொருளாதார ரீதியில் தகுதிபெற்றவராகவும் உங்கள் சட்ட விடயம் சட்ட உதவி ஒண்டாரியோ நிறுவனத்தின் விடயப் பரப்புக்குள் உள்ளடங்குவதாகவும் இருப்பது அவசியமாகும்.

மிகவும் பாரதூரமான சட்ட விடயங்களுக்கு, சட்ட உதவி ஒண்டாரியோ நிறுவனம் தனது சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக முழுமையான பிரதிநிதித்துவத்தை வழங்க முடியும். சில சந்தர்ப்பங்களில், நீங்கள் உங்கள் சட்டக் கட்டணங்களில் சிலவற்றை அல்லது அனைத்தையும் மீளச் செலுத்த வேண்டியிருக்கும். இந்த நிகழ்ச்சிக்கான ஒரு தனியான பொருளாதாரத் தகைமைச் சோதனையில் நீங்கள் தகைமை பெற வேண்டும் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

மேலும் அறிந்துகொள்வதற்கு, எமக்கு அழைப்பை ஏற்படுத்துங்கள் அல்லது **legalaid.on.ca/eligibility** என்ற இணையதளத்திற்குச் செல்லுங்கள்

## குடிவரவு/அகதிகள் விவகாரங்கள்

ஒரு அகதி என்ற வகையில் அல்லது குடிபெயர்ந்தவர் என்ற வகையில் கனடாவில் நுழைவதற்கு அல்லது கனடாவில் தங்கியிருப்பதற்கு உங்களுக்கு உதவி தேவை எனின், அகதி தொடர்பான கோரல்கள், தடுத்து வைத்தல் மீளாய்வுகள், நாடு கடத்தும் கட்டளைகள், அனுசரணையாளர் மேன்முறையீடுகள், சட்ட மீளாய்வுகள் என்பவற்றிலும் மேலும் பல விடயங்களிலும் சட்ட உதவி ஒண்டாரியோ நிறுவனத்தினால் உங்களுக்கு உதவ முடியும்.

மேலதிக தகவல்களை **legalaid.on.ca/immigration** மூலம் அறிந்துகொள்ள முடியும்

## வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள்

சட்ட உதவி ஒண்டாரியோ (LAO) நிறுவனம் பின்வருவன போன்ற சட்ட விடயங்களில் உங்களுக்கு உதவக் கூடிய வழக்கறிஞரொருவருக்கான அணுகலை வழங்குகிறது:

- தடைக் கட்டளையொன்றைப் பெறுவது எவ்வாறு
- தனித்து வாழ்வது அல்லது விவாகரத்துக்கான வழக்கைத் தொடர்வது எவ்வாறு
- நீங்கள் வீட்டிலிருந்து வெளியேறுவதாயின் உங்கள் பிள்ளைகளை எடுப்பதற்கான உரிமை உங்களுக்கு உள்ளதா என்பது
- சமூக உதவிக் காசோலையை உங்கள் சொந்தப் பெயருக்கு மாற்றுவது எவ்வாறு
- உங்கள் பங்காளரை வெளியேற்றுவது அல்லது உங்களுக்குச் சொந்தமானவற்றை மீளப் பெறுவது எவ்வாறு
- நாடு கடத்தல், அனுசரணையாளர் முறிவு மற்றும்/அல்லது உங்கள் பங்காளரின் கோரிக்கையிலிருந்து அகதிக் கோரிக்கையை வேறுபடுத்துதல்

**legalaid.on.ca/domesticviolence** ஐப் பார்வையிடவும்

## குடும்ப விவகாரங்கள்

நீங்கள் உங்கள் உறவாளரிடமிருந்து பிரிகிறீர்களா? உங்களுக்கு பிள்ளைப் பாதுகாப்பு அல்லது அணுகல் மற்றும் உதவிக் கொடுப்பனவுகள் தொடர்பில் உதவி தேவையா? மஸ்தியஸ்தத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துகிறீர்களா? ஆவணங்கள், ஆலோசனை வழங்கும் வழக்கறிஞர்கள் மற்றும் ஏனைய சமூக சேவை முகவர் நிறுவனங்களுக்கான பரிந்துரைகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் குடும்பச் சட்டச் சேவை நிலையத்தில் உள்ள குடும்ப வழக்கறிஞரொருவர் மூலமான பிரதிநிதித்துவம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

வாடிக்கையாளர்கள் குடும்பச் சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் பொதுச் சட்ட ஆலோசனைகளை இலவசமாகப் பெறுவதற்கும் சட்ட ஆவணங்களை மீளாய்வு செய்வதற்கும் - பெரும்பாலான குடும்ப நீதிமன்றத்தில் அமைந்துள்ள - குடும்பச் சட்டத் தகவல் நிலையங்களிலுள்ள வழக்கறிஞர்களுடன் பேச முடியும்.

குடும்பச் சட்டச் சேவைகளின் முழுப் பட்டியலொன்றையும் அமைவிடங்களையும் **legalaid.on.ca/family** இல் பார்வையிட முடியும்